தேதி: ஜனவரி 19, 2014

# சாலைகளில் இன்னும் வசதி

- அருண் ஜெய்ட்லி
எதிர்க்கட்சி தலைவர் (மாநிலங்களவை)

உள்துறை அமைச்சரது வீட்டு வாயிலில் தன் கட்சி உறுப்பினர்களுடன் அமர்ந்து போராட தில்லி முதலவர் முடிவெடுத்துவிட்டார்.. அவர்கள் செயலாற்றாதவர்கள் என்று கருதும் மூன்ற் காவல்துறை ஊழியர்களை பணி நீக்கம் செய்ய வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கை. ஆம் ஆத்மி கட்சியினருக்கு ச்ச்சிவாலயாவில் ஆட்சி நட்த்துவதை விட சாலையில் போராடுவது வசதியாக இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ச்ச்சிவாலயாவில் கட்சி தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பது கடந்த மூன்று வாரங்களில் நடந்தவற்றிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

நாடெங்கிலும் உள்ள அக்கட்சியின் உறுப்பினர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பேசிவருகிறார்கள். அமைப்பில் துளிக் கூட ஒழுங்கு இல்லை.. கட்சியில் கொள்கையாளர்கள்,. செயற்பாட்டாளர்கள், சொந்த கருத்துகொண்டவர்கள், தன்னளவில் நேர்மையானவர்கள் ஆகியோர் இருக்கிறார்கள். இலட்சியவாதிகள் சிலர் கட்சியின் உறுப்பினர்களாகவோ ஆதரவாளர்களாகவோ சேர்ந்திருக்கிறார்கள். ஒரு கட்சியை உருவாக்குவதும் ஆட்சி நட்த்துவதும் போராட்ட்த்துக்கு தலமைதாங்குவதிலிருந்து வேறுபட்ட்த்.

கட்சியைச் சேர்ந்த தில்லியின் சட்ட அமைச்சர் தில்லியில் வாழும் ஆப்ரிக்க தேசத்தவர்களுடன் மிக தீவிரமான பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கிறார்ர். .அவரது அணுகுமுறை இனவெறி சார்ந்ததாகத் தோன்றுகிறது . சில நாட்களுக்குள் அந்தக் கட்சி தன் சொந்த மரபுக்கு மாறான நடைமுறையின் பலிகடாவாகத் தொடங்கிவிட்ட்து.. கும்பல்கள் முடிவெடுக்கத் திராணியற்றவை. அதிகபட்சம் அவர்களால் பொது மக்களை ஈர்க்க முடியும். கட்சி, தில்லியில் அரசு அமைத்ததை, அதன் ஆதர்வாளர்களுக்கு மத்தியில் புத்துணர்ச்சியை ஏற்படுத்த தொடக்கத்தில் பயன்படுத்திக்கொந்து .இன்று கட்சியின் செயல்பாடு ஒவ்வொரு நாளும் சங்கட்த்தைத் தருவதாக அமைந்துள்ளது. இந்தத் திட்டம்டப்பட்ட ஒரு நாள் மறியல் போராட்டம் காங்கிரஸுடன் கட்சிக்கு இருக்கும் மூடிமறைக்கப்பட்ட ஏற்பாட்டை சரி செய்வதற்கா? அரசிலிருந்து வெளியேறி மீண்டும் சாலைக்குச் செல்வதற்கான வழிகளை ஆம் ஆத்மி கட்சி பரிசீலித்துக் கொண்டிருக்கிறதா.? அல்லது ஆம் ஆத்மி கட்சியின் அழுத்தங்களுக்கு இசையும் காங்கிரஸ் மற்றும் உள்துறை அமைச்சரின் தயாரற்ற நிலையை சுரண்டுகிறதா?